**IN THE COURT OF DISTRICT MUNSIF, GUDIYATTAM, VELLORE DISTRICT.**

**OS. No. 149/2021**

| | | DEPOSITION OF WITNESS | DW.2 |
|---|---|---|---|
| NAME | பொம்மி (எ) யசோதா | TALUK | |
| FATHER NAME | | RELIGION | |
| AGE | | OCCUPATION | |
| VILLAGE | | | |

Solemnly affirmed in accordance with the provisions Act of 1873 on the day of 11.08.2026.

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :–**

1. நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும் என்றாலும் சரியாக உள்ளதால் கையெழுத்துப் போட்டு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி எனது அண்ணன் என்றால் சரிதான். அவர்தான் இந்த வழக்கில் பதிலுரை போட்டுள்ளார் என்றால் சரிதான். அவர் போட்ட பதிலுரையை நானும் மற்ற பிரதிவாதிகளும் அப்படியே ஏற்றுக் கொண்டோம் என்றால் சரிதான்.

2. 1ம் பிரதிவாதி நீதிமன்றத்திற்கு வந்து அவர் போட்ட பதிலுரை படி சாட்சியம் அளித்துவிட்டார் என்றால் சரிதான். அவர் தாக்கல் செய்த பதிலுரைபடி சாட்சியம் அளித்துவிட்ட நிலையில் மீண்டும் அந்த பதிலுரை படி நான் சாட்சியம் அளிக்க அவசியம் இல்லை என்றால் சரியல்ல, எனது அண்ணனுக்காக நான் சாட்சியம் அளிக்கிறேன். என் அண்ணன் தான் வழக்கு விவரம் சொல்லி என்னை சாட்சியம் அளிக்க அழைத்து வந்துள்ளார் என்றால் சரிதான்.

3. எனது பிரமாண வாக்குமூலத்தில் வினோதினி மற்றும் விக்னேஷ்வரன் ஆகியோர்களை தரப்பினராக சேர்க்காததால் இந்த வழக்கை தள்ளுபடி செய்யுமாறு சொல்லியுள்ளேன் என்றால் சரிதான், அவர்களுக்கும் இந்த சொத்தில் பங்குள்ளது. தாமரைச் செல்வனும் அவருடைய மகன் தான் என்பதால் அவருக்கும் பங்குள்ளது என்றால் சரிதான், என் அப்பாவுடைய சொத்து. கேமலதாவிற்கு சொத்து கொடுப்பது தான் பிரச்சனை என்றால் அவர் யார் என்றே எனக்கு தெரியாது.

4. பிரமாண வாக்குமூலத்தில் 6ம் பிரதிவாதி பற்றி சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் நாகல் கிராமத்தில் இருந்து வருகிறேன். தாவா சொத்து அனங்காநல்லூரில் உள்ளது. எனக்கு திருமணம் ஆனதிலிருந்து நாகல் கிராமத்தில் வசிக்கிறேன் என்றால் சரிதான். நான் நாகல் கிராமத்தில் இருப்பதால் சொத்தில் எனக்கு உரிமை இல்லை என்றால் என் அப்பா

சொத்தில் எப்படி உரிமை இல்லை. என் தாத்தா மற்றும் அப்பாவிற்கு குடும்ப தொழில் விவசாயம் தான் என்றால் சரிதான்.

5. விவசாய வருமானத்தை வைத்துதான் குடும்பம் நடத்தினோம் என்றால் சரிதான். விவசாயம் தவிர வேறு வருமானம் இல்லை என்றால் கூட்டாக கூலிவேலைக்கு செல்வோம். கூட்டாக வேலை செய்து வந்த வருமானத்தில் தான் சொத்து வாங்கினோம் என்றால் சரிதான். விக்னேஷ்வரன் மற்றும் வினோதினி ஆகியோர்களை தரப்பினர்களாக சேர்க்க நாங்கள் மனு போடவில்லை என்றால் சரிதான்.

6. என் அண்ணனுடைய முதல் மனைவி எப்போது இறந்தார் என தெரியுமா என்றால் தெரியாது. பிரமாண வாக்குமூலத்தில் ஜெயந்தி 20.12.2017 அன்று வாதி மற்றும் 6ம் பிரதிவாதியை வாரிசுகளாக விட்டுவிட்டு இறந்தார் என தவறாக குறிப்பிட்டுள்ளதாக எப்படி சொல்கிறேன் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. எனது பிரமாண வாக்குமூலத்தில் வாதியும் 6ம் பிரதிவாதியும் கூட்டுசேர்ந்து இத்தாவாவை 1ம் பிரதிவாதியுடம் கூட்டு சேர்ந்து தாக்கல் செய்ததாக சொல்லியுள்ளேன் என்றால் பொய்யாக உள்ளது என் அண்ணனுக்கு எதிராக எப்படி சொல்வேன்.

7. ஜெயந்தி இறந்தபிறகு வசந்தியை 2வது திருமணம் செய்துகொண்டதாக சொல்லியுள்ள நிலையில் 2017ல் தான் ஜெயந்தி இறந்துள்ளார் ஆனால் வசந்திக்கு வினோதினி 2012லும் விக்னேஷ்வரன் 2014லும் பிறந்ததாக பி.சா.ஆ.2 மற்றும் 3 ஆவணத்தில் தெரியவருகிறது என்றால் ஆதாரில் தவறாக இருக்கலாம். தவறான ஆவணத்தை சரிப்பார்க்காமல் தாக்கல் செய்தேனா என்றால் ஆமாம். எனக்கு வழக்கு விவரங்கள் சரிவர தெரியாது என்றாலும் 1ம் பிரதிவாதி அழைத்ததால் அவருக்காக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் எனது சாட்சியம் ஏற்றுக் கொள்ளக்கூடியதல்ல என்றால் சரியல்ல.

8. வசந்தி 1ம் பிரதிவாதியின் மனைவி என்றாலும் அவருக்கு இந்த வழக்கு நடக்கும் விவரம் ஆரம்பம் முதல் தெரியும் என்றால் சரிதான். ஆனால் அவர் குழந்தைகளை இந்த வழக்கில் சேர்க்க எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரிதான். குழந்தைகளின் ஆதார் ஆவணத்தை 1ம் பிரதிவாதி தாக்கல் செய்யவில்லை என்றாலும் நான் தான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி தான் ஆவணத்தை கொடுத்து தாக்கல் செய்ய சொன்னார் என்றால் சரிதான். வாதிக்கு கிடைக்க வேண்டிய சொத்து அவருக்கு கிடைக்ககூடாது என்பதற்காக வழக்கை இழுத்துப் போக ஆவணங்களை 1ம் பிரதிவாதி தாக்கல் செய்கிறார் என்றால் சரியல்ல.

K KARTHICK ASATH

Digitally signed by K KARTHICK ASATH
Date: 2026.08.11 17:27:18 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
குடியாத்தம்.